நிர்வாக ஆணையர் அலுவலகம்
30 APR 2013
016368
சென்னை 600 005

2917

சுருக்கம்

பொதுப்பணிகள் – ஈரோடு நகராட்சியின் முன்னாள் இளநிலைப் பொறியாளர் திரு ஏ.ரங்கப்பா (தற்போது ஓய்வு) தமிழ்நாடு நகராட்சிப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 8(2)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை – இறுதி ஆணை – வெளியிடப்படுகிறது.

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை**

**அரசாணை(ப) எண்.224** **நாள்: 26.04.2013**

**படிக்கப்பட்டது:–**

(1) நகராட்சி நிர்வாக ஆணையரின் குறிப்பாணை ந.க.எண்.39751/2001/எப்1, நாள் 19.08.2002.

(2) குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் 23.5.2003 நாளிட்ட தற்காப்பு முகாந்திரம்.

(3) நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.39751/2001 /எப்1, நாள் 12.3.2004.

(4) விசாரணை அலுவலரின் 16.07.2004 நாளிட்ட விசாரணை அறிக்கை.

(5) விசாரணை அறிக்கையின் மீது குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் 23.11.2006 நாளிட்ட கூடுதல் விளக்கம்.

(6) அரசாணை(ப)எண்.104, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை, நாள் 24.02.2011.

(7) நீதிப்பேராணை எண்கள் .4520 மற்றும் 4521/2010 மீது சென்னை உயர்நீதிமன்றம் 09.04.2010 அன்று அளித்த தீர்ப்பு.

(8) அரசு காரண விளக்கக் கடித எண்.41246/நப.3/2004–28, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.02.2011.

(9) காரண விளக்கக் கடிதத்தின் மீது குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் 28.3.2011 நாளிட்ட பதில்.

(10) அரசு கடித எண்.41267/நப.3/2004–31, நகராட்சி நிர்வாம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28.09.2012.

(11) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடித எண் 877/டிசிடி/இ1/2013–1, நாள் 18.03.2013.

*****

**ஆணை:–**

ஈரோடு நகராட்சியில் வ.உ.சி. பூங்காவில் ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது மேடை அமைக்கும் பணியில் நடைபெற்ற முறைகேடுகளுக்காக அந்நகராட்சியின் முன்னாள் நகராட்சிப் பொறியாளர், திரு ஏ.ரங்கப்பா மீது, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் குறிப்பாணையில் 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிப் பணி விதிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் விதி 8(2)–ன் கீழ் 7 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது.

இதனையடுத்து, குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தனது தற்காப்பு முகாந்திரத்தினை அளித்தார். பின்னர், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறைகளில், நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டு அவர் தனது விசாரணை அறிக்கையினை மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்துடன் அளித்துள்ளார். விசாரணை அறிக்கை மீதான கூடுதல் விளக்கத்தினை குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அளித்துள்ளார். விசாரணை அலுவலர் தனது அறிக்கையில், குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் மீது பிறப்பிக்கப்பட்ட 7 குற்றச்சாட்டுகளுள், குற்றச்சாட்டுகள் 1, 4, 6 மற்றும் 7 நிரூபணமாவதாகவும், குற்றச்சாட்டுகள் 2, 3 மற்றும் 5 நிரூபணமாகவில்லை என்று தெரிவித்துள்ளார்.

2. குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் மீது பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அதற்கான தற்காப்பு முகாந்திரம், விசாரணை அலுவலரின் அறிக்கை, அதன் மீதான குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் கூடுதல் விளக்கம் ஆகியவை கீழ்க்கண்டவாறு:-

<u>குற்றச்சாட்டு 1</u>

திரு M.A. ரங்கப்பா, முன்னாள் இளநிலை பொறியாளர், ஈரோடு நகராட்சியில் பணியாற்றியபோது நகராட்சிக்கு சொந்தமான வ.உ.சி. பூங்காவில் பொது கூட்ட மேடை ரூ.13.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 120-ன்படி வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யாமலும், முறையான மதிப்பீடு (Estimate) செய்யப்படாமலும், அதற்கான தொழிற் நுட்ப அனுமதியும் பெறாமல் அரசு விதிகளை மீறி தன்னிச்சையாக செயல்பட்டுள்ளார்.

<u>குற்றம் சாட்டப்பட்ட அலுவலரது தற்காப்பு முகாந்திரம்.</u>

I submit that I have not at all acted independently and against Government orders etc.,

My action in this regard is one obeying the orders of the M.E. my immediate technical superior. Hence I deny this charge as I have obeyed the orders of the M.E.

<u>விசாரணை அலுவலரின் அறிக்கை</u>

The Accused Officer should have prepared detailed estimate, justifying the estimated total amount for the work at Rs.13.50 lakhs. The defence of the Accused Officer is not acceptable. Hence this charge is held proved.

<u>விசாரணை அறிக்கை மீது குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் கூடுதல் விளக்கம்</u>

The further representation of the delinquent officer is as follows:-

As already stated in my defence that the work of construction of dais did not involve any masonry construction and it is only steel fabrication work such as M/s Trusses, M.S.L. Angle, AC sheets etc., and these works would be done on comparative rates since there is no schedule of rates available in the responding year of schedule of rates. The rates quoted by the Alampatty Carpentary and Blacksmith Co-operative Societies, Namakkal are competitive among these societies participated. Due to urgency involved in execution of work, I had acted on the advice of the superior officers since I do not have time to prepare the detailed estimates and sketches due to

over work load and outdoor water supply inspection in solving the public grievances. Moreover provision in the Budget can be given in the Revised Estimate. I had not at all acted independently and not acted against the Government orders. Hence, I denied the charges.

<u>குற்றச்சாட்டு எண்.2</u>

இவர் தமிழ்நாடு நகராட்சி நடைமுறை தொகுதி II விதி 644 மாறாக வ.உ.சி. பூங்காவில் பொது மேடை அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோராமல் விலைப்புள்ளி மட்டுமே கோரப்பட்டு அரசு விதிகளை மீறியுள்ளார்.

<u>குற்றம் சாட்டப்பட்ட அலுவலரது தற்காப்பு முகாந்திரம்</u>

The Alampatti Carpentary and Blacksmith Workers Industrial Co-operative Society Ltd., is under the full control of the Asst. Director of Khadi & Village Industries. It has executed so many works in Erode Municipality. There are many Govt. instructions to encourage such kind of societies. Hence as instructed by the M.E. who is my immediate Superior and as this is a registered society and as the work was urgently to be taken up as instructed by the P.A. to Local Administration Minister, note was put up to call for sealed quotations, which was duly approved by the Commissioner. Hence I submit that I did not act against instructions 6.44 of Municipal Manual, and therefore I deny this charge.

<u>விசாரணை அலுவலரின் அறிக்கை</u>

The work was given to the Industrial Co-operative Society as per the G.O. (Ms).No.539, Industries Department, dated 13.10.92. As per the Government Order, the work can be entrusted to Industrial Co-operative Society and advance of 90% of the anticipated bill amount as advance payment can be given to the Society. Hence, this charge is not held proved.

<u>குற்றச்சாட்டு எண்.3</u>

அரசாணை எண்.539, தொழிற்துறை, நாள் 13.10.92–ன்படி உற்பத்தி செய்யும் கூட்டுறவு நிறுவனத்திற்கு தான் ரூ90/. முன்பணம் வழங்கப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. அதற்கு மாறாக ஆலம்பட்டி மற்றும் தச்சு தொழிலாளர் தொழில் கூட்டுறவு சங்கம் என்ற நிறுவனம் எந்த தளவாட சாமான் உற்பத்தி செய்யவில்லை என தெரிந்தே அந்நிறுவனத்திற்கு ரூ.12,15,000/– முன்பணம் வழங்கி, அந்நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து நகராட்சி நிதியை சுரண்டல் (Swindled the Municipal Fund) செய்துள்ளார்.

<u>குற்றம் சாட்டப்பட்ட அலுவலரது தற்காப்பு முகாந்திரம்</u>

Since the Alampatty is also a Industrial Co-operative Society, payment of 90% of the cost of the work was recommended. The Council also has in its resolution sanctioned this payment and then only the payment was made in 2 spells by cheque. The Alampatty Co-operative Society has supplied all the steel fabrications except rolling shutters as early as on 06.01.94, 29.03.94, 07.04.94 and requested to show the site for erection of the dais. Hence there is no swindling of the Municipal Fund. Hence I deny the charge.

விசாரணை அலுவலரின் அறிக்கை

It is a registered society with information of the location with machinery. They have produced documents for running the society, the bylaw approved by the Assistant Director of Khadi & Village Industries. Hence, this charge is held not proved.

குற்றச்சாட்டு எண்.4

பொது மேடை அமைக்க, ஆலம்பட்டி மற்றும் தொழில் கூட்டுறவு சங்கம் என்ற நிறுவனத்திற்கு 25.11.93ல் பணி உத்திரவு (Work Order) வழங்கப்பட்டுள்ளதில் வரையறுக்கப்பட்ட 30 நாட்களுக்குள் பணி முடிக்க அந்நிறுவனத்துடன் ஒப்பந்தப் பத்திரம் பெறப்படாததால் நகராட்சி பணம் ரூ.12,15,000/– திரும்ப அந்நிறுவனத்திடமிருந்து பெற நடவடிக்கை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு நகராட்சிக்கு பெரும் நிதி இழப்பு ஏற்படுத்தி உள்ளார்.

குற்றம் சாட்டப்பட்ட அலுவலரது தற்காப்பு முகாந்திரம்

I submit, that since the shape of the dais had been changed from "rectangular" to "semicircle" type the society demanded an additional cost of Rs.36,500/-. But no reply had been given to the society in this regard as to whether the additional expenditure is accepted or not. All these have pulled down the erection work. Since all these acts have occurred only after my transfer from Erode, I am, in no way responsible in this matter. Further, time factor of 30 days will not be sufficient in this work as this is a big work. Hence he denied the charge.

விசாரணை அலுவலரின் அறிக்கை

The defence of the Accused Officer in the light of later development of changing the shape of the dais is not acceptable. While there is a delay in execution, he should have taken efforts to verify whether agreement has been made for enforcing the society either to do the work or to get refund of the advance. By blaming the D'man, his contention that he is not responsible for the delay is not acceptable. Hence this charge is held proved.

விசாரணை அறிக்கை மீது குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் கூடுதல் விளக்கம்,

I submit to state that I am not responsible for non-execution of the agreement that it was the responsibility of the D'man who was dealt with the file. In this connection, I bring it your kind notice that the Junior Engineer is not preparing and executing the agreement relating to any type of works, within his jurisdiction of division in Erode Municipality. This can be verified from any of the work file of Erode Municipality of corresponding year. The delay is caused due to the change of design from rectangular shape to semi-circular shape by then Municipal Engineer Mr.B. Sadasivam. Also then named above Municipal Engineer has not accepted the further expenditure of Rs.36,500/- for the execution of semi circular shape of dais is the reason caused for the delay, inspite of request made by Alampetty Co-operative Carpentary and Blacksmith Society, Namakkal. In this situation explained above are the facts and not amounted for blaming the other colleagues officials of Erode Municipality. I therefore deny the charges.

**குற்றச்சாட்டு எண்.5**

இவர் அரசாணை எண்.536, தொழில் துறை 13.10.92ல் குறிப்பிட்டுள்ளதை மறைத்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு விலைப்புள்ளி மட்டுமே பெறப்பட்டு பொது கூட்ட மேடை அமைக்கலாம் என நகராட்சி ஆணையருக்கும் நகர் மன்றத்திற்கும் தவறான குறிப்பு வைத்து அரசு விதிகளை மீறி செயல்பட்டுள்ளார்.

**குற்றம் சாட்டப்பட்ட அலுவலரது தற்காப்பு முகாந்திரம்**

He submit that he did not submit any wrong note and he only acted as per the instructions of his superiors. Hence he denied the charge.

**விசாரணை அலுவலரின் அறிக்கை**

As per the charge, there is no ground to prove that the Accused Officer has concealed the G.O.No.536, Industries Department, dated 13.10.92 and the G.O. says that the works can be entrusted to the manufacturing unit and 90% advance of the anticipated estimate of the work can be given. Hence this charge is held not proved.

**குற்றச்சாட்டு எண்.6**

கூட்டுறவு சங்க நிறுவனத்திடமிருந்து தளவாட சாமான்களை பெறப்பட்டு தளவாட சாமான்களை இருப்பு பதிவேட்டில் பதிந்து, மேடை அமைக்க நடவடிக்கை எடுக்காததின் மூலமும், அதற்குரிய முக்கியமான ஆவணங்ளை ஈரோடு நகராட்சியில் இது நாள் வரை ஒப்படைக்காததன் மூலமும், அந்நிறுவனத்துடன் இவரும், திரு முத்துதாணுலிங்கம் மற்றும் எஸ்.சதாசிவம், நகராட்சியில் பொறியாளர், திரு ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளரும் கூட்டு சேர்ந்து நகராட்சிப் பணம் ரூ.12.15 லட்சத்தை சுரண்டல் செய்துள்ளார்.

**குற்றம் சாட்டப்பட்ட அலுவலரது தற்காப்பு முகாந்திரம்**

The erections fabricated materials brought by the Society had to be dumped in the place. They cannot be taken into the Municipal stores as the fabrications are of big size. Question of writing the M.Book did not arise then, because entries will generally be made after the completion of the work. So also entry in store ledger does not arise as these materials are going to be used in the site where they are dumped. He also submit that he only witnessed the unloading of the materials in the VOC Park and he signed only as witness. Except the above he has not acknowledged the receipt and he handed over all the charge to his successor and no file in with him. Also submit that he did not swindle Municipal funds in connivance with his superiors. Hence he denied the charge.

**விசாரணை அலுவலரின் அறிக்கை**

When he acknowledged the materials, it will be presumed as Municipal property. He should register it to the Municipal records. Had he failed to acknowledge, it would have been the responsibility of the society to take care of the materials till the completion of the work. By acknowledging, he had acted for the interest of the society instead for the interest of the Municipality. He had not taken any further step to complete the work. Hence the charge that he conspired with others to swindle the money is also proved.

**விசாரணை அறிக்கை மீது குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் கூடுதல் விளக்கம்**

I have already stated in my defence that the materials received from Alampetty Co-operative Carpentary and Blacksmith Society, Namakkal are witnessed by me since I was in charge of VOC park area and also the proposed site lies in the same VOC park.

In this connection, I like to bring it to your kind notice that no materials will be entered in the store ledger unless they have been used for the work at site. Further, the work has not been completed by using the supplied materials. So the entry in the measurement Book does not arise. I had entered the similar type of works in M.Books on completion of work this can be verified on any of the similar type of executed work in Erode Municipality. I have clearly explained above facts. I deny the charges.

**குற்றச்சாட்டு எண்.7**

மேற்படி முறைகேடுகள் தொடர்பான புகைப்பட மூலமாக தினசரி பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டதால், பொது மக்களிடமிருந்து நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தி நிர்வாகத்திற்கு குந்தகம் ஏற்பட காரணமாக இருந்துள்ளார்.

**குற்றம் சாட்டப்பட்ட அலுவலரது தற்காப்பு முகாந்திரம்**

He submit that he is no way responsible in this regard. He was transferred from Erode Municipality on 22.12.94. After his transfer so many occurrences, detailed below, had happened i.e.

i. Inspite of the fact that the steel fabrication had been supplied within 3 months, none in office care, to show the site where the dais to be erected.
ii. The M.E. Thiru Sadasivan had not co-operated in this regard with the Society to show the site despite he was approached several times in persons by the Society people.
iii. The matter was taken to the notice of the Commissioner Thiru Sri Ramulu by the Society he also had not taken any action.
iv. The Shape of the dais has been changed into Semi Circle from rectangle for which the Society had claimed Rs.36,500/- additionally. But no reply either accepting or refusing the payment had been sent.
v. Besides, the subsequent Commissioner, Thiru Muthuveeran when represented by the Society to given them permission and show site for erection, he had directed the society to approach the Chairman and that he cannot do anything.
vi. Criminal complaint had been lodged with Police by the Office stating that, the society had not supplied any fabricated steel articles so far and that the society cheated the Municipality and thereby requested to take criminal action against the Society. The police refused to interfere in this, stating that this is a Civil Matter.

Hence, he denied the charge.

<u>விசாரணை அலுவலரின் அறிக்கை</u>

Since no tangible action is taken to complete the work or to recover the advance money by the delinquent officer, it resulted in the adverse criticism by media at a later date. This led to the bad image of the Municipal administration. Hence the charge is held proved.

<u>விசாரணை அறிக்கை மீது குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் கூடுதல் விளக்கம்</u>

I have already submitted my defence in detail for this charge. Any how the criticism occurred in the media are only after my transfer. The officers responsible for the tarnish of the image are Mr.B.Sadasvam then Municipal Engineer and Mr.P.Vadivelu then Assistant Executive Engineer of Erode Municipality since they have not co-operated to complete the work by the Society tangible.

3. இதனிடையே, குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் தற்காலிகப் பணிநீக்கம் விலக்கிக்கொள்ளப்பட்டு அவர் மீது நிலுவையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு பாதகமின்றி அவரை 31.05.2003 பிற்பகல் பணியிலிருந்து ஓய்வுபெற அனுமதியளித்து மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

4. இந்நேர்வில், குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் மீது பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அதற்கு அவர் அளித்துள்ள தற்காப்பு முகாந்திரம், விசாரணை அலுவலரின் அறிக்கை, அதன் மீது குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் அளித்துள்ள கூடுதல் விளக்கம் ஆகியவை விரிவாக பரிசீலனை செய்யப்பட்டது. பரிசீலனைக்குப் பின்னர், விசாரணை அலுவலரின் கண்டுபிடிப்பினை ஏற்று, அவர் மீது பிறப்பிக்கப்பட்ட 7 குற்றச்சாட்டுகளுள், குற்றச்சாட்டுகள் 1, 4, 6 மற்றும் 7 நிரூபணமாவதாகவும், குற்றச்சாட்டுகள் 2, 3 மற்றும் 5 நிரூபணமாகவில்லை என்று கருதி நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்குத் தண்டனையாக அவரின் ஓய்வூதியத்திலிருந்து பிரதி மாதம் ரூ.500/– வீதம் மூன்று ஆண்டுகளுக்குப் பிடித்தம் செய்யவும், அவரால் நகராட்சிக்கு ஏற்பட்ட நிதியிழப்பினை சரிசெய்யும் விதமாக அவருக்கு சேரவேண்டிய இறப்பு மற்றும் ஓய்வுகால பணிக்கொடைத் தொகை ரூ.2,69,825/– (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து எண்ணூற்று இருபத்தைந்து மட்டும்) முழுவதையும் பிடித்தம் செய்யலாமென்று உத்தேச முடிவெடுத்து, இவ்வுத்தேச தண்டனையை குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் ஏற்றுக்கொள்கிறாரா அல்லது மறுக்கிறாரா என்பது குறித்து, தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின், விதி 9–ன் கீழ் மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் காரண விளக்கக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் மேலே ஒன்பதாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், அரசின் உத்தேச தண்டனையை ஏற்க மறுத்ததையடுத்து, மேலே பத்தாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், 1954–ம் ஆண்டுடைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில் ஒழுங்குமுறை 18(1)(c)–ன் கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்து கோரப்பட்டது.

5. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மேலே பதினொன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், கீழ்க்கண்டவாறு தனது கருத்தினைத் தெரிவித்துள்ளது:–

The delinquent officer Thiru Rankapa, who was Junior Engineer, Erode Municipality, who had to retire on 31.05.2003 but allowed to retire on 24.02.2011 without prejudice to the disciplinary proceedings pending against him was charged with financial irregularities and there were 7 counts in the charge against him. Charges were framed under 8(2) of the Tamil Nadu Municipal Engineering Service (Discipline and Appeal) Rules, The Inquiry Officer conducted inquiry as per procedures. During the inquiry, the delinquent did not raise / nor question some of the important aspects, but without any ground or validity, he mentioned or made pleas in his explanation. The Inquiry Officer considered all the relevant facts put forward by the delinquent and held

counts 1, 4, 6 and 7 as proved. Counts 2, 3 and 5 were held as not proved. The Commission is convinced with the procedures followed in the inquiry and it is fair.

Hence, the Commission advises the Government to proceed with their decision i.e., "to cut Rs.500/- per month for 3 years from his pension and recover Rs.2,69,825/- from his Death Cum Retirement Gratuity" and issue orders accordingly".

6. மேற்கூறிய நிலையில், குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் மீது பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அதற்கு அவரின் தற்காப்பு முகாந்திரம், விசாரணை அலுவலரின் அறிக்கை, அதன் மீதான குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் கூடுதல் விளக்கம் ஆகியவை அரசால் சுயமாகவும், கவனமாகவும் தொடர்புடைய ஆவணங்களின் அடிப்படையிலும் ஆய்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்று, ஈரோடு நகராட்சியின் முன்னாள் இளநிலைப் பொறியாளர் திரு ஏ.ரங்கப்பா, மீது பிறப்பிக்கப்பட்ட 7 குற்றச்சாட்டுகளுள், குற்றச்சாட்டுகள் 1, 4, 6 மற்றும் 7 நிரூபணமாவதாகவும், குற்றச்சாட்டுகள் 2, 3 மற்றும் 5 நிரூபணமாகவில்லை என்ற விசாரணை அலுவலரின் கண்டுபிடிப்பினை ஏற்று நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்குத் தண்டனையாக அவரின் ஓய்வூதியத்திலிருந்து பிரதி மாதம் ரூ.500/– வீதம் (ரூபாய் ஐநூறு மட்டும்) மூன்று ஆண்டுகளுக்குப் பிடித்தம் செய்யவும், அவரால் நகராட்சிக்கு ஏற்பட்ட நிதியிழப்பினை சரிசெய்யும் விதமாக அவருக்கு சேரவேண்டிய இறப்பு மற்றும் ஓய்வுகால பணிக்கொடைத் தொகை ரூ.2,69,825/–ஐ (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து எண்ணூற்று இருபத்தைந்து மட்டும்) முழுவதையும் பிடித்தம் செய்யலாமென்ற அரசின் உத்தேச முடிவினை உறுதி செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

7. மேலே பதினொன்றாவதாகப் படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் இவ்வரசாணையுடன் தனியருக்கு அனுப்பப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

29/4/17

(க.பணீந்திர ரெட்டி)
அரசுச் செயலாளர்.

29.4.17

பெறுநர்

திரு.ஏ. ரங்கப்பா, முன்னாள் இளநிலைப் பொறியாளர், ஈரோடு மாநகராட்சி
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழிமுறையாக) (இணைப்புடன்)
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை– 600 005.
ஆணையர், ஈரோடு மாநகராட்சி.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை–600 108.

நகல்:–

செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், பிரேசர் பாலச்சாலை, சென்னை–3.
அரசு வழக்குரைஞர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை–108 (நீதிப்பேராணை எண்கள்.4520 மற்றும் 4521/2010 மீது சென்னை உயர்நீதிமன்றம் 09.04.2010 அன்று அளித்த தீர்ப்பு)
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
செயலர் அவர்களின் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2)துறை, சென்னை– 600 009.

(Served copy to be return)